[*1994 நவம்பர் 10*

திரு. எம். ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே திருமலைக்கேணி என்ற முருகனுடைய ஸ்தலம் இருக்கிறது. அதை சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் சொல்லி 10,12 வருடங்கள் ஆகின்றன. அங்கே மான்கள் சரணாலயம், மயில்கள் சரணாலயம் அமைக்க வனத் துறையிலே போதுமான இடங்கள் இருக்கிற காரணத்தால் அதை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுகூட புதிய சரணாலயங்கள் 8 அமைக்கப்பட்டன. விடுதலை பெற்ற பிறகு சென்ற ஆண்டுவரை தமிழகத்தில் 14 சரணாலயங்கள் தான் இருந்தன. சென்ற ஆண்டு 8 சரணாலயங்கள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டு எந்தெந்தப் பகுதிகளில் சரணாலயங்கள் அமைக்க வேண்டுமென்பது பற்றி அரசு ஆய்ந்து வருகிறது. எந்தெந்தப் பகுதிகளில் சரணாலயங்கள் அமைக்க வேண்டுமென்பது பற்றி முடிவு எடுக்கிறபோது அந்தப் பகுதியின் பொருளாதாரப் பிரச்சினை போன்றவை பரிசீலிக்கப்படும். மேலும் ஒரு பகுதியில் சரணாலயம் அமைக்கப்படுவதன் மூலமாக, அங்கே இருக்கக்கூடிய மக்கள் சில கடுமையான சட்ட திட்டங்களை அனுசரிக்க வேண்டிய சூழ்நிலை வரும். எனவே இதற்கு உகந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, இந்த ஆண்டும் அரசு அறிவிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பசுபதி, ஐ.ஏ.எஸ். அளித்த திட்டம் பற்றிய மூலக் கேள்வியைக் கொடுத்துவிட்டு, அது பற்றி எந்தத் துணைக் கேள்வியும் கேட்கவில்லை.*

வினா எண் 94, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

94—

விராலிமலையில் மயில்கள் சரணாலயம் அமைத்தல்

25347—திரு. சி. குழந்தைவேலு:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 10]

குளத்தூர் தொகுதி, விராலிமலையில் மயில்கள் அதிக அளவு வசிப்பதால், அங்கு மயில்கள் சரணாலயம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சியிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள விராலிமலையில் அருள்மிகு சுப்பிரமணியசாமி ஆலயத்தைச் சுற்றியுள்ள இடங்களில் மயில்கள் அதிக அளவில் உள்ளன. இங்கு மயில்கள் சரணாலயம் அமைக்க வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இல்லை. கோவில் நிலத்தை கையகப்படுத்தி சரணாலயம் அமைத்தால் பொதுமக்கள் அந்த நிலத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்பதால், விராலிமலையில் மயில்கள் சரணாலயம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

முற்பகல் 10-50

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருணகிரியாரால் பாடப்பட்ட திருத்தலம் விராலிமலை கோவில் ஆகும். அந்த முருகப்பெருமான் கோயிலிலும், அந்த மலையைச் சுற்றியுள்ள சுமார் 100 கிராமங்களிலும், ஆயிரக்கணக்கான மயில்கள் வசித்து வருகின்றன. அங்கே ஒரு சரணாலயம் இல்லாததால், அங்கே உள்ள மயில்கள் வேட்டையாடப்பட்டும், பேருந்துகளில் அடிப்பட்டும் இறந்து வருகின்றன. தேசியப் பறவையான அந்த மயில்களைப் பாதுகாப்பதுடன், சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கும் அங்கே மயில்கள் சரணாலயம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் அமைந்துள்ள அந்த இடத்தில், கட்டிடங்கள் நீங்கலாக 3.78 ஹெக்டேர் கோயில் புறம்போக்கு நிலங்களையும், மற்றும் அடிவாரத்தில் 3.05 ஹெக்டேர் பட்டா புஞ்சை நிலங்கள் ஆகியவற்றையும் வனத் துறை கையகப்படுத்தினால்தான் அங்கே மயில்கள் சரணாலயம் அமைக்கமுடியும். ஆனால் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குத் தென் பகுதியில் குடிநீர்க் குளம், சுனை, கருப்பர் கோயில், சாமியார் அடக்கம் செய்யப்பட்ட சமாதி, கோயிலின் வட பகுதியில் குடிநீர்க் குழாய், மேல்நிலைக் குடிநீர்த் தேக்கத் தொட்டி, யாகசாலை மண்டபம் ஆகியவை உள்ளன. வனத்துறையினர் மயில்கள் சரணாலயம்

அமைத்தால் நான் குறிப்பிட்ட இந்த இடங்கள் எல்லாம் பொதுமக்களால் பயன்படுத்தப்பட முடியாத அளவுக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடும் என்பதால், கோயில் புறம்போக்கு நிலத்தை வனத்துறைக்கு ஒப்படைக்க இந்து சமய அறநிலையத்துறை விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே அந்த இடத்தில் உள்ள மயில்களைப் பாதுகாக்க, அவைகளைப் பராமரித்தாலே போதுமானது. எனவே இந்த ஆண்டு மயில்கள் சரணாலயம் அமைக்காமலேயே அந்தப் பகுதியில் மயில்களைப் பாதுகாக்க *0.25* இலட்சம் கேட்டு நம்முடைய வனத்துறை ஒரு செயற்குறிப்பைத் தயாரித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, திரு. உ. பலராமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

95—

சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பதவிக்கு நியமனம்

***44547—திரு. உ. பலராமன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எப்பொழுது பணியில் அமர்த்தப்படுவார்.?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விரைவில் பணியில் அமர்த்தப்படுவார்.

திரு. உ. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு, டாக்டர் ராகவன் என்பவரை முதல்வராக்குவதற்காக அந்தக் கல்லூரியின் கமிட்டி சிபாரிசு செய்து கல்லூரித் துறை ஆணையரும் அதற்கு ஒப்புதல் தந்து, அதை மறுபடியும் திருப்பி அனுப்பி மாவட்டக் கல்வி அலுவலர் ஒப்புதல் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டு, அதையும் பூர்த்தி செய்தும், இதுவரை அவர் அந்தப் பதவியில் நியமிக்கப்படாமல் இருக்கிறாரே, அவரை உடனடியாக அங்கே நியமிக்க அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.